உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதுகுறித்து ஆய்வு செய்து, அங்கே தேவை என்று சொன்னால், வேலூர் மாவட்டம் தொழில் மையத்தின்மூலமாக ஆவன செய்யப்படும் எனத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 486, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

486—

பொறியியல் கல்லூரி

***5712—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் அண்ணா தொழில்நுட்ப உறுப்புக் கல்லூரி ஒன்றும், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 13-ம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 6,405 இடங்களில் சென்ற கல்வியாண்டில் 2,661 இருக்கைகள் தவிர, மீதமுள்ள இடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, வந்தவாசி தொகுதியில் ஒரு புதிய பொறியியல் கல்லூரி துவங்கும் கருத்துரு இந்த ஆண்டு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானமாய், வசந்தமாய், வற்றாத ஜீவ நதியாய், வள்ளலின் வாரிசாய், தமிழகத்தின் ஒளிவிளக்காய்த் திகழும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பல ஆண்டு பேசும் 2 ஆண்டு பொற்கால ஆட்சியைப் படைத்திட்ட எங்கள் அன்னையே, கடைக்கோடியில் இருக்கும் ஊர்களையும் முதன்மை நிறைந்த நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு அரும்பாலமாய்த் திகழும் எங்கள் அன்னையின் ஆட்சி. இந்திய நாடே போற்றும் வளமான தமிழகம் கண்ட எங்கள் அன்னையே! நாளை உலகம் போற்றும் இந்தியாவைப் படைக்கப்போகும் வருங்காலப் பாரதப் பிரதமரே! (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்கால மாணவர் சமுதாயம் உயர முத்தான திட்டங்கள் தந்த கல்விக் கடவுளே, தங்கள் பாதம் பணிந்து வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் ஒரு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 553 பொறியியல் கல்லூரிகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. 7 அரசு பொறியியல் கல்லூரிகள், 3 அரசு நிதியுதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், 525 சுயநிதி பொறியியல் கல்லூரிகள், 18 அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் ஆக மொத்தம் 553 பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10—15

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012—2013 ஆம் கல்வி ஆண்டில், தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு புதிய பொறியியல் கல்லூரி தொடங்கி வைத்து, அதில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று, தற்போது அந்தக் கல்லூரி நடைபெற்று வருகின்றது. அதற்கடுத்து,

2013 மே 14]

2012—2013 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம், செட்டிக்கரையிலும், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியிலும் மேலும் இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதோடுமட்டுமல்லாமல், இந்தக் கல்வி ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் ஓர் அரசு பொறியியல் கல்லூரியைத் தொடங்குவதற்கும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாரில் ஒரு புதிய அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி– polytechnic ஒன்றையும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த ஆண்டு துவங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வியைப் பெற வேண்டி பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய *553* கல்லூரிகளில் *2,62,164* இடங்கள் இருக்கின்றன. சென்ற கல்வி ஆண்டைப் பொறுத்தவரையில், *1,82,491* இடங்களில் மட்டுமே மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மீதி *79,673* இடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலே அரசு ஒதுக்கீடாக *24,618* இடங்கள் காலியாக இருக்கின்றன. நிருவாக ஒதுக்கீட்டின்கீழ் சுய நிதி பொறியியல் கல்லூரிகளில் இருக்கக்கூடிய *55,055* இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக மொத்தம் *79,673* மாணவர்கள் சேர்வதற்கு இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்குப் போதுமான இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியான வந்தவாசியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டிலே மாணவர்கள் சேர்ந்து படிக்கின்ற அளவிற்கு போதுமான இடங்கள் இருப்பதால், அங்கு இந்த ஆண்டு துவங்குவதற்கு வாய்ப்பு இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி ஒரு பின்தங்கிய தொகுதி.

வந்தவாசி தொகுதியிலே ஒரு பொறியியல் கல்லூரியை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவர்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தவாசி மிகவும் பின்தங்கிய தொகுதி, அங்கே ஒரு பொறியியல் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை விகிதம் உயர்கிறபோது, எந்தெந்த இடம் பின்தங்கிய பகுதி, எந்தெந்த இடத்தில் மாணவர்களுக்குப் படிக்க வசதி இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, மேலும், ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு, சென்று கல்வி கற்க வாய்ப்பில்லாமல் இருக்கக்கூடிய மாவட்டம் எது என்பதையெல்லாம் அறிந்து, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில், அரசு முடிவு எடுக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த 12 ஆம் வகுப்புத் தேர்வு முடிவில் தமிழகத்திலேயே அதிகமான தேர்ச்சி விகிதம் பெற்றது விருதுநகர் மாவட்டம். அதிலும் குறிப்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் கல்வி மாவட்டம் 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதலிடம் பெற்றிருக்கின்றது. ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் அரசுப் பொறியியல் கல்லூரிகளோ, அரசு உதவிபெறும் கல்லூரிகளோ எதுவும் இல்லை. மாநிலத்தில் முதலிடம் பெற்றிருக்கக்கூடிய ஸ்ரீவில்லிப்புத்தூர் கல்வி மாவட்டத்தில், பொறியியல் கல்லூரி ஒன்று துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

2013 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருதுநகர் மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி இல்லையென்ற ஒரு குறையை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விருதுநகர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், 2 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த மாவட்டத்தினுடைய மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கிற வகையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், ஒரு தொகுதிக்கு ஒன்று என்றோ அல்லது மாவட்டத்திற்கு ஒன்று என்றோ நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், அண்ணா பல்கலைக்கழகம் முழுவதற்குமாக ஒரு தேர்வு நடத்தி, மாணவர்களுடைய விண்ணப்பத்தைப் பெற்று மாணவர்களைச் சேர்த்து வருகின்றார்கள். எந்த இடத்தில் ஒரு கல்லூரி இருக்க வேண்டும், எங்கே விரும்பிப் படிக்க வேண்டும் என்று மாணவர்கள் விருப்பப்படுகிறார்களோ, அதற்கேற்ப தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் அவர்கள் சென்று படிக்கலாம். ஆகவே, மாவட்டத்திற்கு ஒன்று, தொகுதிக்கு ஒன்று, ஏரியாவுக்கு ஒன்று என்று பார்ப்பதைவிட மாணவர்கள் எந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று ஆர்வம் இருக்கிறதோ அந்தக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 79 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, தமிழ்நாட்டில் மாணவர்களின் தேவைக்கேற்ப அதிகமான கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே அங்கு மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளலாம் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, எதிர்காலத்தில் இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அதைப் பற்றிய கருத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*